***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.172/2024 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | பழனியப்பன் |
| *Father/Husband's Name* | ராமசாமி |
| *Village* | சித்தேரி |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.11.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து சித்தேரி மெயின் ரோட்டில் நான் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்தில்லை. விபத்து நடந்த மறுநாள் தான் எனக்கு ஆஜர் எதிரி விபத்து ஏற்படுத்தியதாக நான் கேள்விபட்டேன். அ.சா.2, அ.சா.3 மற்றும் விபத்தில் இறந்து போன மகேந்திரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது டீக்கடைக்கு அடிக்கடி டீ குடிக்க வருவார்கள். சுமார் 6-7 மாதங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் மன்னார்குடியிலிருந்து எனது கடைக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு, இரவு 09.00 மணியளவில் எனது ஊர் சித்தேரிக்கு சென்றபோது சித்தேரி மெயின் ரோட்டில் விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். அந்த விபத்து யார் ஏற்படுத்தியது என்ற விவரம் நான் கேள்விபடவில்லை. ஆனால் அந்த விபத்தில் மகேந்திரன் என்பவர் இறந்துவிட்தாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 07.03.2024-ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் அ.சா.3 பரத்திற்கு சொந்தமான TN50 L7971 பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் நீலக்கலர் இருசக்கர வாகனத்தில் பரத் வாகனத்தை ஓட்ட பின்னால் பரத்தின் தந்தை அ.சா.2 சுதாகர் மற்றும் மகேந்திரன் ஆகியோர்கள் சித்தேதி ஜங்சன் பிரிவு சாலை மகாமாரியம்மன் கோவிலடி உண்டியல் முன்பாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வடக்கு புறம் திரும்பும்போது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 50 AW 3319 என்ற பதிவெண் கொண்ட Enfiled bullet கருப்பு கலர் வாகனத்தை ஆஜர் எதிரி ஹாரன் அடிக்காமலும், ஆஜராக்கிரதையாகவும், அதிவேகமாவும் ஓட்டி வந்து பரத் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் பரத்திற்கு வலது கை மற்றும் வலது காலில் ரத்தக்காயம் ஏற்பட்டதென்றும், சுதாகர் என்பவருக்கு வலதுபுற நெற்றியில் ரத்தகாயம் ஏற்பட்டதென்றும், மகேந்திரன் என்பவரின் தலையின் பின்பக்கம் அடிபட்டு, ரத்த காயம் வந்ததென்றும், காயம்பட்டவர்களை நானும், கார்த்திகேயன் என்பவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சம்பவத்தின்போது இல்லை. விபத்தை நான் பார்க்கவில்லை. பின்னர் காயம்பட்ட மகேந்திரன் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அன்றையதினமே இரவு 11.00 மணியளவில் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால்? மறுநாள் போலீசார் சொல்லி தான் தெரியும். போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சம்பவத்தை நேரடியாக பார்த்தாக கூறிவிட்டு, தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்தது பற்றி எனக்கு மறுநாள் கேள்விபட்டு தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். மறுநாள் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் எனது பெயர், அப்பா பெயர் மற்றும் செல்போன் எண்ணை வாங்கிக்கொண்டார்கள்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.172/2024 – P.W. 5 (LW6)***

| | |
|---|---|
| *Name* | புகழேந்தி |
| *Father/Husband's Name* | ஞானசுந்தரம் |
| *Village* | சித்தேரி |
| *Age* | 38 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.11.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நான் தற்காலிக தொழிலாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி ரமேஷ் என்பவரை தெரியாது. விபத்தில் இறந்த போன மகேந்திரன் என்பவரை தெரியும். அ.சா.2 சுதாகர், அ.சா.3 பரத் ஆகியோர்களை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். தேதி வருடம், மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் காலை 9 மணியளவில் நான் வேலைக்காக வந்துக்கொண்டிருந்தபோது, விபத்து நடந்ததாக போலீசார் அங்கு நின்றுக்கொண்டு, என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அன்றையதினம் காலையில் தான் மகேந்திரன் என்பவர் பஸ் ஸ்டாப், ஆர்ச் அருகே விபத்தில் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். என்னிடம் விசாரித்த போலீசாரும் பஸ் ஸ்டாப் அருகே நின்றுக்கொண்டு தான் கையொப்பம் வாங்கினார்கள். (**பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து தெரியாது. போலீசார் கையொப்பம் கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டுக் கொடுத்து விட்டு தற்போது போலீசார் சொல்லிக்கொடுத்தற்கிணங்க சம்பவயிடத்தில் வைத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.11.2025
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.